# ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளை 2021-22 ஆம் நிதி ஆண்டு ஆண்டு அறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு சட்டம் 2017-ல் ஆணையிடப்பட்டவாறு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.22280 / 2017 / எக்ஸ்-1 நாள் 30.8.2017-இன்படி ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளை பத்திரமானது 22.9.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண் 150/2017, நாள் 25.9.2017-இன்படி ஈரோடு மாவட்ட சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிர்வாகக் குழு அமைப்பு | | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர்,<br>ஈரோடு | 1. | மாவட்ட ஆட்சியர்,<br>ஈரோடு |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>ஈரோடு | 2. | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>ஈரோடு |
| 3. | உதவி இயக்குநர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>ஈரோடு | 3. | உதவி இயக்குநர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>ஈரோடு |
| 4. (அ) | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>ஈரோடு | 4. | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>ஈரோடு |
| (ஆ) | துணை இயக்குநர்,<br>சுகாதாரப் பணிகள்,<br>ஈரோடு | 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,<br>ஊராட்சிகள் வளர்ச்சி,(PAPD)<br>ஈரோடு |
| (இ) | முதன்மைக் கல்வி அலுவலர்,<br>ஈரோடு | 6. | உதவி இயக்குநர்,<br>ஊரகவளர்ச்சித் துறை,<br>ஈரோடு |
| (ஈ). | மாவட்டக் கருவூல அலுவலர்,<br>ஈரோடு. | 7. | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,<br>ஈரோடு |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>ஈரோடு | 8. | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்,<br>ஈரோடு / பெருந்துறை. |
| (ஊ) | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),<br>ஈரோடு | 9. | மாவட்ட வன அலுவலர்,<br>ஈரோடு. |
| (எ). | தலைவர்,<br>ஈரோடை, ஈரோடு | 10. | முதன்மைப் பொறியாளர்,<br>பொதுப்பணித்துறை (WRO)<br>ஈரோடு |
| (ஏ) | எஸ்.கே. யோகநாதன்,<br>த/பெ. கிருஷ்ணசாமி,<br>செலம்ப கவுண்டன் வலசு,<br>பெத்தாம்பாளையம்,<br>பெருந்துறை | 11. | உதவி இயக்குநர்,<br>நிலஅளவைப் பதிவேடுகள் துறை,<br>ஈரோடு |
| | | 12. | மாவட்ட கருவூல அலுவலர்,<br>ஈரோடு. |
| | | 13. | மாவட்ட சமூகநல அலுவலர்,<br>ஈரோடு. |
| | | 14. | துணை இயக்குநர், (Health)<br>சுகாதாரப் பணிகள்,<br>ஈரோடு |
| | | 15. | ஒளிரும் ஈரோடு அமைப்பு,<br>ஈரோடு. |
| | | 16. | நிர்வாக பொறியாளர்,<br>(கிராமப்புற வளர்ச்சி),<br>ஈரோடு. |

2) ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக பாரத மாநில வங்கி கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண் 37239746192) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்ணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்டகனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

3) ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளைக்கான நிரந்தர கணக்கு எண் பெறப்பட்டுள்ளது (PAN No. AABTE0874H)

4) ஈரோடு மாவட்டத்தில் பெருங்கனிம குவாரிகள் ஏதும் இல்லை. சிறுகனிம உரிமங்களில் குவாரி குத்தகை உரிமங்கள் 12.01.2015 தேதிக்கு முன்னர் வழங்கப்பட்டவைக்கு அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்கள் 12.01.2015 தேதிக்கு பின்னர் வழங்கப்பட்டவைக்கு அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

5) ஈரோடு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.3.2022 வரை வங்கி கணக்கில் ரூ. 2,85,94,365.50/- (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தி ஐந்து இலட்சத்து தொன்னூற்று நான்காயிரம்து முன்னூற்று அறுபத்தி ஐந்து ரூபாய் ஐம்பது பைசா மட்டும்) இருப்பில் உள்ளது.

6) 2018-19 ஆம் நிதியாண்டில் ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக ரூ.49,99,500/- மதிப்பிலான 14 திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. 2019-2020 ஆம் நிதியாண்டில் ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக ரூ.49,20,000/- மதிப்பிலான 9 திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. 2020-21 ஆம் நிதியாண்டில் ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக ரூ.49,80,000/- மதிப்பிலான கீழ்க்கண்ட 4 திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2021-22 ஆம் நிதியாண்டில் கொரோனா தொற்று (Covid-19) காரணமாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாலும், திட்டம் செயல்படுத்தும் அலுவலர்களிடமிருந்து (Implementing Agency) முன்மொழிவுகள் எதுவும் வரப்பெறவில்லை என்பதாலும் நிர்வாகம் / மேலாண்மை குழு கூட்டம் நடத்தப்படவில்லை.

8) 2021-22 ஆம் நிதியாண்டில் ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக கீழ்க்கண்ட பிற செலவினங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது.

| வ. எண் | செலவின விவரம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | ஏப்ரல் 2021 முதல் ஆகஸ்ட் 2021 மாதம் வரை சென்னை புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அலுவலக செலவினங்களுக்காக 1% தொகை வழங்கப்பட்டது. | 17540/- |
| 2. | ஏப்ரல் 2021 முதல் ஆகஸ்ட் மாதம் நிர்வாக செலவிற்காக தனியாக துவங்கப்பட்டள்ள வங்கி கணக்கில் 5% தொகை வழங்கப்பட்டது. | 90700/- |
| 3. | கனிம அறக்கட்டளையில் பணிபுரியும் கணினி தரவு இயக்குபவருக்கு ஊதியம் | 45161/- |

இவ்வாண்டறிக்கை ஈரோடு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு முன்பாக தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

11/15

தலைவர்,
ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளை /
மாவட்ட ஆட்சித் தலைவர்,
ஈரோடு.

16/7/22

16/7/22